**அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம் - 2016**

-----------------------------------------------------------

அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைமைக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சக கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுகின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டவைகள் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் ஈடுசெய்யப்பட முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 732,679,823 தொகையான கடன் மீதியில் ரூபா 5,294,106 தொகையான செலவு மீதி கழிக்கப்பட்டு ரூபா 727,385,717 தொகையான தேறிய கடன் மீதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மூலதனத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் தன்மை மற்றும் அவற்றை பேணித் செல்வதன் நோக்கம் போன்றன தொடர்பில் வெளிப்படுத்தல்கள் அவசியமான போதிலும், கூட்டுத்தாபனத்தினால் பேணிச்செல்லப்படும் மூலதன ஒதுக்கங்கள், பொது ஒதுக்கங்கள், அபிவிருத்தி ஒதுக்கங்கள் போன்றன தொடர்பில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

(i) முன்னைய ஆண்டின் சீராக்கமான ரூபா 38,327,278 தொகையான மீதி உள்ளடக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் அதன் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

- ஆண்டினுள் வருமான வரியாக ரூபா 30,000,000 தொகை கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 25,000,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது.

- முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 37,941,634 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது ரூபா 36,160,264 ஆக காண்பிக்கப்பட்டமையால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,781,370 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

- வட்டி செலுத்த வேண்டிய கடன் செலுத்தல்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அதிகரிப்பு ரூபா 99,537,720 ஆன போதிலும், அது ரூபா 86,782,343 ஆக காண்பிக்கப்பட்டமையால் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 12,755,377 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

கூட்டுத்தாபனத்தால் முன்னைய ஆண்டுகளுக்குரிய வழுக்களைத் திருத்துதல் பின்னோக்கி சீராக்கம் செய்து முன்னைய ஆண்டின் நிதி நிலையை மீண்டும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக முன்னைய ஆண்டின் சீராக்கங்களால் இலாபத்திற்கு ஏற்பட்ட ரூபா 73,242,347 தொகையான தாக்கம் மீளாய்வாண்டின் மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் வைத்திருப்பு வருவாயிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

வருமான வரி செலவினமாக நடப்பாண்டின் வரி செலவினத்திற்கு முன்னைய ஆண்டிற்குரிய குறை ஒதுக்கீடுகள் / மிகை ஒதுக்கீடுகள் மற்றும் பிற்போடப்பட்ட வரி செலவினம் / வருமானம் இனங்காணப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் வரி செலவினமாக நடப்பாண்டின் வரி செலவினம் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்குரிய குறை வரி ஒதுக்கீடு ரூபா 11,536,948 ஆக இருந்ததுடன், அதனை கூட்டுத்தாபனத்தின் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்திற்கு வரவு வைத்தமையினால் மீளாய்வாண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 11,536,948 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பிற்போடப்பட்ட வரியினை கணக்கு வைத்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தலினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. விசேட வரி கணிப்பீட்டின் போது எழும் தற்காலிக வேறுபாடுகள் (Temporary Differences) மற்றும் நிரந்தர வேறுபாடுகள் (Permanent Differences) இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் தொகுதிக்குரிய அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,420,429 கூட்டுப் பெறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் பிரதிபலனாக சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதியை விட அதிகமாக மீள்மதிப்பீட்டு பெறுமதி அதிகரிக்குமெனின் அந்த அதிகரிப்பு ஏனைய விரிவான வருமானத்தினுள் இனங்காணப்பட வேண்டியதுடன், மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றினுள் ''மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்'' எனும் பெயரிலான தலைப்பின் கீழ் மீள்மதிப்பீட்டு இலாபம் காண்பிக்கப்பட வேண்டும். எனினும் மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகனங்களின் மீள்மதிப்பீட்டு இலாபம் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்ததுடன், மீள்மதிப்பீட்டு இலாபம் ஏனைய விரிவான வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மொத்த விரிவான வருமானம் ரூபா 36,015,363 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிறுத்தி வைக்கப்பட்ட இலாப ஒதுக்கம் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) நடைமுறையல்லா சொத்துக்களுக்காக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 183,762,693 தொகையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், அந்த சொத்துக்களை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதன் பிரகாரம் எற்பட்ட மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

ஓய்வூதிய நலன்களை கணக்கு வைத்தல் தொடர்பில் ஓய்வூதிய நலன்களின் திட்டம் தொடர்பான சாதாரணமான விபரமொன்று, ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளின் தற்போதைய பெறுமதிகளை இணக்கம் செய்தல் தொடர்பான விபரம், தற்போதைய சேவைக் கிரயம், உண்மையான வருமானம் அல்லது நட்டம் (Actual Gain or Loss) மற்றும் கடந்த சேவைக் கிரயம் போன்றவற்றின் தகவல்கள் இனங்காணப்பட்டு அதன் இலாபம் அல்லது நட்டம் சீராக்கப்பட்ட முறைமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இருப்பு அறிக்கைகளின் பிரகாரம், நிலவிய முடிவுப் பொருட்கள் மற்றும் முடிவடையாத பொருட்களின் இருப்பினை விட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முடிவடையாத மற்றும் முடிவடைந்த பொருட்களின் இருப்பானது தவறுதலாக ரூபா 15,000,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக முடிவடைந்த இரண்டு அச்சீட்டு நடவடிக்கைகளின் பட்டியல் பெறுமதியான ரூபா 41,454,000 தொகை வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த அச்சீட்டு பணிகளுக்குரிய அச்சீட்டு கிரயத்தில் ரூபா 966,514 தொகை முடிவடையாத இறுதி இருப்பினுள்ளும், ரூபா 10,898,322 பெறுமதியான 92,117 கிலோ கிராம் எடையுள்ள கடுதாசி மூலப்பொருள் இருப்பினுள்ளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 11,864,836 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) காகிதாதிகள் விற்பனையின் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி சேர் வரியின் பெறுமதியான ரூபா 31,511,137 தொகையான பணம் காதிதாதி வருமானமாக கருத்திற் கொள்ளப்பட்டமையால், மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது பாடப் புத்தகங்களை அச்சிட்டு உடன்படிக்கை திகதிக்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்காமையால் ரூபா 26,007,297 ஆன தாமத கட்டணங்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அதற்காக கணக்குகளில் ரூபா 3,571,658 தொகை மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 82,045,046 கூட்டுத்தொகையான கடன் மீதியொன்றை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதியான ரூபா 703,301,233 இல் 11 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 80,124,336 தொகையான கடன்பட்டோர் மீதியில் 04 வருடங்களை விஞ்சிய தீர்க்கப்படாத கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 11,016,563 அல்லது 14 சதவீதமாகும்.

(இ) மேற்படி (அ) மற்றும் (ஆ) பந்திகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தேசிய கடதாசிக் கம்பனியிலிருந்து அறவிடவேண்டியிருந்த மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் முறையே ரூபா 9,753,427 மற்றும் ரூபா 7,460,675 ஆக இருந்தது. இந்த மீதியில் 03 வருடங்களை விஞ்சிய மீதிகள் முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்த போதிலும் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1942 இன் 45 ஆம் இலக்க கைத்தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 59 ஆம் பிரிவு | தீ விபத்து எச்சரிக்கை சமிக்ஞை கட்டமைப்பொன்று நிறுவப்பட்டிராததுடன், தீப்பிடிக்கும் சந்தர்ப்பமொன்றில் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறை மற்றும் அதற்கு முகங்கொடுத்தல் தொடர்பில் போதியளவான பயிற்சியொன்று ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு | குழாம் போக்குவரத்திற்காக உரித்தினை பெறும் கூட்டுத்தாபனத்தின் மத்திய நிலையிலான 14 முகாமையாளர்களுக்காக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக உத்தியோகத்தர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 17,500 படியாக 2016 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரை ரூபா 691,250 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | 3.2 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படிகள் போதுமானதாக இல்லாதிருக்கும் விசேட சந்தர்ப்பமொன்றில் பணப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான எரிபொருள் செலவினம் மீளளிப்பு செய்யப்பட முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தானத்தினால் பொது முகாமையாளரின் மேலதிக எரிபொருள் செலவின அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி கூட்டுத்தானத்தின் ஊழியர் ஒருவர் அமைச்சிற்கு அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்பட கூடாத போதிலும், முகாமைத்துவ பயிலுநர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் 2008 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து வட மேல் மாகாண சபைக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தார். |
| (iii) | 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய பீஈடீ/05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01, 02 மற்றும் 03 ஆம் பிரிவுகள். | மிகை ஊதியம் செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 53,029,119 தொகை மிகை ஊதியமாக கூட்டுத்தாபத்தின் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 943,720 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,111,384 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,167,664 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விற்பனை கிரயம் ரூபா 152,393,746 இனால், பகிர்ந்தளிக்கும் செலவினம் ரூபா 8,761,123 இனால் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 7,007,387 இனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையும் மிகை ஏற்பட்டிருந்த போதிலும், அது 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் சீராகக் குறைவடைந்திருந்தது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் பணிக்கொடை, அரச வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் மீண்டும் சீராக்கும் போது போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 469,013,635 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் இறுதியில் அது ரூபா 599,107,326 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1968 இன் 24 ஆம் இலக்க அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொழிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அரசாங்கம் உள்ளூராட்சி நிறுவனங்கள், எழுத்துமூல சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், தனியார் நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்களின் அச்சிடல் அல்லது வெளியீட்டுப் பணிகளை நிறைவேற்றுதல்.

(ii) காகிதாதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் போன்ற பணிகளுக்குப் பொறுப்பான இருத்தல்.

(iii) கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் ஏனைய நிறுவனங்களினால் அல்லது அச்சிடப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற புத்தகங்கள், கல்விசார் உசாத்துணை, செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் ஆகிய பணிகளுக்குப் பொறுப்பாக இருத்தல்.

மீளாய்வாண்டின் போது மேற்படி நோக்கங்களை நிறைவேற்றலின் செயலாற்றல் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் ஏனைய நிறுவனங்களினால் அல்லது அச்சிடப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற புத்தகங்கள், கல்விசார் உசாத்துணை செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் விற்பனை, பகிர்ந்தளித்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் ஆகிய பணிகள் மூலம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலும் உழைத்த வருமானம் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 0.01 சதவீதம் முதல் 0.08 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தமையால் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் போதியளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாடப் புத்தகங்களை அச்சிடல் மற்றும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்காக முறையே கல்வி வெளியீட்டு திணைக்களத்திடமிருந்து மற்றும் தேசிய லொத்தர் சபையிலிருந்து மீளாய்வாண்டினுள் ரூபா 1,090,385,915 தொகையான வருமானம் கிடைத்திருந்ததுடன் அது வருடத்தின் ஒட்டுமொத்த வருமானமான ரூபா 1,477,236,807 இன் 74 சதவீதமாக இருந்தமையால் கூட்டுத்தாபனத்தினால் தமது வருமான மூலங்களை வகைப்படுத்தியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுக்காக 23 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 10 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இரண்டு தனியார் நிறுவனங்களால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், அந்த நிறுவனங்களுக்கு அறவிடப்பட வேண்டியதாக எந்தவொரு கடன் மீதியும் இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ள போது கூட்டுத்தாபனத்தினால் அந்த இரண்டு நிறுவனங்களுக்காக ரூபா 1,180,993 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய முறையில் விற்பனை இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மற்றும் விற்பனை பிரிவின் பணிகளை உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் இயலுமான விதத்தில் மீளாய்வாண்டிற்கான விற்பனை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் பண்டக் குறியீடுகளுக்காக (Bar codes) வருடாந்தம் ரூபா 10,000 தொகையான பதிவுக் கட்டணமொன்றினை தனியார் கம்பனியொன்றிற்கு செலுத்துவதன் மூலம் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பயிற்சி புத்தகங்களின் பண்டக் குறியீடுகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், அந்த பண்டக் குறியீடுகளை பயன்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்பட்டிராமையின் காரணத்தால் விற்பனை நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்ற முடியாதிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக 12 விற்பனை நிலையங்கள் காணப்படுவதுடன், அதில் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினருக்காக விற்பனை முகாமைத்துவத்திற்குரிய எந்தவொரு பயிற்சியும் மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விற்பனை நிலையங்களின் விற்பனை வருமானத்தை அதிகரித்தலை ஊக்குவிப்பதற்காகவும், ஊழியர்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கு அவர்களை தூண்டுவதற்காகவும் விற்பனை இலக்குகளை வருடாந்தம் அதிகரிக்கக்கூடிய விதத்தில் (Progressively) கூட்டுதல் நல்லதொரு முகாமைத்துவ அங்கமொன்றான போதிலும், கூட்டுத்தாபனத்தின் ஆறு விற்பனை நிலையங்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த விற்பனை இலக்குகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,000,000 இலிருந்து ரூபா 5,500,000 வரை குறைத்து வழங்கப்பட்டிருந்தது.

(உ) போட்டி அடிப்படையிலான சந்தையில் செயற்படும் அரசாங்க அச்சீட்டு கூட்டுத்தாபனத்தினால் தமது பயிற்சி புத்தகங்கள், அச்சிடப்பட்ட நூல்கள் மற்றும் ஏனைய வணிக வெளியீடுகள் தொடர்பில் சந்தை மதிப்பாய்வொன்று மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் முன்னைய வருடங்கள் முதல் காணப்பட்ட பத்து விற்பனை நிலையங்களில் ஆறு நிலையங்களும் மீளாய்வாண்டில் இலக்கிடப்பட்ட விற்பனைகளில் 12 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையான தமது இலக்குகளை அடைந்திருக்கவில்லை. மூன்று விற்பனை நிலையங்கள் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன், வருடாந்த நட்டம் ரூபா 160,550 முதல் ரூபா 1,556,829 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) பாடப் புத்தகங்களை அச்சிடும் லிதோ பிரிவிலுள்ள ஐந்து பழமையான இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டிற்குரிய பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான கால எல்லையான 2016 ஆகஸ்ட் முதல் திசெம்பர் மாதம் வரையான ஐந்து மாதங்களினுள் 1999 இயந்திர மணித்தியாலங்கள் உடைந்து விழுந்தமையால் செயலற்று காணப்பட்டதுடன், அதனால் பாடசாலை புத்தகங்களின் அச்சிடல் நடவடிக்கைகளுக்கு தடையேற்பட்டிருந்தது.

## 4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

முறையான கையளித்தலின்றி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியில் 13 ஏக்கர் 2 ரூட் 06 பேர்ச் அளவொன்று கைத்தொழில் பேட்டையொன்றை அமைப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் உயர் மற்றும் மத்திய நிலைகளிலான பத்து முகாமையாளர்கள் எதிர்வரும் 03 வருட காலப்பகுதியினுள் ஓய்வு பெற்று செல்வதற்கு நிமித்தமாக உள்ள போதிலும், அந்த பதவிகளுக்கான மாற்றுத் திட்டமொன்று (Succession Plan) கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போட்டித் தன்மையுடனான அச்சீட்டுத்துறையின் அச்சீட்டு கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்கும் சந்தை பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கும் கடமையாற்றும் விற்பனை ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் 2016 சனவரி 18 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாக நிலவியது.

(இ) அங்கீகரிக்கப்படாத அச்சீட்டு உதவி பணியாளர் (Press Aide) பதவிக்காக மீளாய்வாண்டில் 13 ஊழியர்கள் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பதவிகள் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்படாத கனிஸ்ட பொது உற்பத்தி ஊழியர் பதவிக்காக மீளாய்வாண்டின் இறுதியில் 212 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது 29 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது வியாபார திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.3 அம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் கூட்டுத்தாபனத்தின் ஆணடறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கமைய தயாரித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.